ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2295/09 - 2022 අගෝස්තු මස 31 වැනි බදාදා - 2022.08.31
*2295/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 10/2011*

**2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்**
**2 ஆம் பிரிவின்கீழ் கட்டளை**

2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக்கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு :-

(அ) இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு சீட்டாட்டத் தொழில் எந்த இடத்தின்மீது அல்லது வளவுகளின்மீது அல்லது எந்த இடத்தில் அல்லது வளவுகளில் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த இடத்தை அல்லது வளவுகளை சீட்டாட்டத் தொழிலில் ஈடுபடுவதற்கான குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பாக பெயர் குறிக்கின்றேன்; அத்துடன்

(ஆ) இக்கட்டளை இரண்டாயிரத்து இருபத்திரெண்டு செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, ஓகத்து 31.

EOG 08 - 0145

1A - PG 5973 — 456 (2022/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.